# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.187/2021</u>

2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நரேந்திரன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

நான் மனுதாரர்களின் வீட்டின் அருகில் குடியிருக்கிறேன். நான் போட்டித்தேர்வு எழுதுவதற்கு தயார் ஆகிகொண்டிருக்கிறேன். விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவெண்கள் தெரியுமா என்றால் நீண்டநாட்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகமில்லை. விபத்து நடந்தவுடன் நான் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கவில்லை. 108 ஆம்புலன்சில் இறந்துபோனவரை கொண்டுசென்றார்கள். இறந்துபோனவர் எனக்கு நண்பரா என்றால் தெரிந்தவர். அவருக்கு முதல்உதவி சிகிச்சை எதுவும் நாங்கள் செய்யவில்லை. விபந்து நடந்த நேரம் காலை சுமார் 10.30, 11.00 மணிநேரம் இருக்கும். விபத்தில் அடிப்பட்டவரை நான் தூக்கி பார்க்கவில்லை. விபத்தில் அடிப்பட்டவர் குடிபோதையில் வாகனத்தை ஓட்ட முடியாமல் வந்து எதிரில் வந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் அவர்

குடித்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், விபத்து சம்மந்தமாக எனக்கு எந்த விவரம் தெரியாது என்றும், மனுதாரர்கள் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்திசையில் வந்து இடித்தவர்களை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் இடித்தவர் ரவிந்திரன் மகன் செல்வமுருகன் என்று எவ்வாறு கூறியுள்ளேன் என்றால் அவர் இடித்துவிட்டுபோய்விட்டார் அருகில் இருப்பவர்களை விசாரித்தபோது அவர்கள் சொன்னார்கள். விபத்தில் இருவரும் அடிப்பட்டு கீழே கிடந்தார்கள். எதிர்திசையில் வந்து அடிப்பட்டவரை 108 ஆம்புலன்சில் அழைத்துசெல்லவில்லை. எதிர்திசையில் வந்து காயமடைந்தவர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று விட்டு அதன்பிறகு தனியார் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அடிப்பட்டவரும் எதிர்திசையில் வந்து காயமடைந்தவரும் கீழே கிடந்தார்கள் என்றும், அவர் ஓடிபோய்விட்டார் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:** இல்லை

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.